# நல்ல பாடல்கள்



எஸ். நவராஜ் செல்லையா

M.A., D.P.E., M.P.Ed.

# நல்ல பாடல்கள்

டாக்டர்.

எஸ். நவராஜ் செல்லையா

M.A., ~~D.P.E.~~, M.P.Ed. Ph.D.

D.Litt., D.Ed; FUWAI

சாந்திமலர் பதிப்பகம்
சென்னை - 17

## BIBLIOGRAPHICAL :DATA


| | | |
|---|---|---|
| Title | — | NALLA PADALKAL |
| Author | — | S. NAVARAJ CHELLIAH |
| Language | — | Tamil |
| Edition | — | First |
| Date of Publication | — | January 1980 |
| Copyright | — | S. NAVARAJ CHELLIAH |
| Paper Used | — | 10.9 Kg. Seshasayee |
| Size | — | 17.5x12 cm |
| Type Points | — | 12 Points |
| Pages | — | 40 |
| Copies | — | 1200 |
| Printer | — | GRACE PRINTERS Madras-33. |
| Publisher | — | SHANTHIMALAR PATHIPPAGAM 46, Ranganathan Street, T. Nagar, Madras-17. |

**Price** **Rs. 1-75**

| | | |
|---|---|---|
| Sudject | — | Rhymes for Children |
| Special Information | — | Suitable for Children of Lower Standards |

# முன்னுரை

பாடுவதென்றாலும், ஆடுவதென்றாலும் குழந்தைகளுக்குக் கொண்டாட்டம்தான். எதையும் கூர்ந்து நோக்குவதிலும், என்னவென்று அறிந்துகொள்ள ஆசைப்படுவதிலும், அவற்றை எப்படியாவது புரிந்துகொள்ள முயல்வதிலும் அவர்களுக்கு நிகர் அவர்களே!

சொல்லித்தரும் கருத்துக்கள் சுவையானதாக மட்டுமன்றி, பயனுள்ளதாகவும் அமைந்துவிட்டால், படிக்கும் குழந்தைகளின் எதிர்காலம் பண்புள்ளதாய், சமுதாயத்திற்கு துணை கொடுப்பதாய் அமைந்துவிடும்.

சமுதாயத்தின் அங்கங்களாய் விளங்கும் குழந்தைகளை, குணத்தில் தங்கங்களாய், கொள்கையில் சிங்கங்களாய் மாற்றிவிட்டால், வாய் பிளந்தலையும் வாழ்க்கைப் பிரச்சினைகள், பசை, வாலை சுருட்டிக்கொண்டு ஓடிவிடுமே!

அத்தகைய நன்னோக்கிலே, குழந்தைகளுக்குத் தேவை என்று நான் கருதிய கருத்துக்களை மையமாக வைத்து, எளிமையும், இனிமையும் நிரம்பிய பாடல்களாய் எழுதியிருக்கிறேன்.

உடலுக்குப் பயிற்சி வேண்டும். உடல் உறுதியாய் அமைய வேண்டும். உழைப்பு, பணிவு, உயர்ந்த அறிவு வேண்டும் என்ற கருத்துக்களை வலியுறுத்தியிருக்கும் பாடல்கள் தான் அதிகம்.

பள்ளிகளில் மாணவ மாணவிகளுக்குப் பயன்படும்வகையில் உருவான இந்நூலை ஏற்று ஆதரிக்க வேண்டுகிறேன்.

எஸ். நவராஜ் செல்லையா

# உள்ளே


1. அம்மா அப்பா
2. காலையில் எழுவோம்
3. குளிர்ந்த நீரில் குளிப்போம்
4. பள்ளிக்கூடம் போகலாம்
5. பள்ளிக்கூடம்
6. தாய்மொழி தமிழ்
7. அன்பாய் இருப்போம்
8. நிமிர்ந்து நிற்போம்
9. உடல் பயிற்சி
10. ஓட்டப் பாட்டு
11. கூடி ஆடுவோம்
12. செல்வம் என்பது உடல்நலமே
13. சாலைப்பாட்டு
14. நடைப்பாதையில் நடப்போம்
15. சூரியன்
16. காற்று
17. தண்ணீர்
18. மண்ணின் கதை
19. மரத்தின் கதை
20. என் பெயர் ரோஜா
21. பச்சைக்கிளியே வா வா!
22. ஆட்டுக்குட்டி
23. எங்கள் வீட்டு நாய்க்குட்டி
24. சுறுசுறுப்பான எறும்பு!
25. சேவலைப்பார்
26. எங்கள் லட்சியம்
27. மேன்மையாக வாழுவோம்
28. திருநாள்
29. இப்படி வாழ்வோம்
30. வழிகாட்டி
31. தமிழைப் படிப்போம்
32. கவிதைப் பயிற்சி

# அம்மா அப்பா

அம்மா அப்பா நம்தெய்வம்
நம்முடன் வாழும் நல்தெய்வம்
நம்மால் நடப்பது ஒன்றுமில்லை
நாளும் அவர்வழி சென்றிடுவோம்!

அன்பால் நம்மைக் காப்பவராம்
அறிவால் நம்மை வளர்ப்பவராம்
துன்பம் தன்னைத் தீர்ப்பவராம்
இன்பம் தினம்தினம் சேர்ப்பவராம்!

அறுசுவை உணவுகள் படைப்பவராம்
அழ்காய் உடைகளும் கொடுப்பவராம்
பொறுமையாய் பணிகள் செய்பவராம்
பொன்னடி போற்றிப் பணிந்திடுவோம்!

# காலையில் எழுவோம்

காலையிலே எழுவோம்
கடவுளையே தொழுவோம்
காலைக்கடன் முடிப்போம்
குளிர்ந்தநீரில் குளிப்போம்

பாடங்களைப் படிப்போம்
புதிய ஆடை உடுப்போம்
பள்ளிநோக்கி நடப்போம்
பத்திரமாய் கடப்போம்!

அமைதியாக இருப்போம்
அடங்கிபாடம் கேட்போம்
அறிவைநாளும் வளர்ப்போம்
ஆசான்வழி நடப்போம்!

# குளிர்ந்த நீரில் குளிப்போம்

குளிர்ந்தநீரில் குளிப்போம்
குளுமையாக இருப்போம்
கலகலவென சிரிப்போம்
கையைவீசி நடப்போம்!

தைலம் உடலில் தேய்த்து
தடவிநன்குப் பார்த்து
காலைநேரம் முழுக்கு
கதறிஓடும் அழுக்கு!

சுறுசுறுப்பைக் கொடுக்கும்
சோம்பலையே அழிக்கும்
விரும்பிதினம் குளிப்போம்
வைத்தியரை மறப்போம்!

# பள்ளிக்கூடம் போகலாம்

பள்ளிக்கூடம் போகலாம்
பாடங்களைப் படிக்கலாம்
துள்ளிவிளை யாடலாம்
தோரணம்போல் ஆடலாம்!

ஆசிரியர் அன்புடன்
அறிவுரைகள் சொல்லுவார்
ஆசையாகக் கேட்கலாம்
அறிஞராக ஆகலாம்!

நல்லநல்ல கதையெலாம்
நடிப்புடனே சொல்லுவார்
செல்லமாக இருக்கலாம்
சேர்ந்துபாடி சிரிக்கலாம்!

ஒற்றுமையாய் பழகலாம்
உண்மைஅன்பைக் காணலாம்
கற்கண்டாக இனித்திடும்
கல்விகற்று மகிழலாம்!

# பள்ளிக்கூடம்

பள்ளிக் கூடம் கலைக்கூடம்
துள்ளும் சிறுவர்கள் தொழிற்கூடம்!

எண்ணும் எழுத்தும் இசைபாடும்
இதயத்தில் என்றும் அசைபோடும்
கண்ணும் கருத்தும் கலைதேடும்
காவியக் கற்பனை அலையாடும்!

உடலை வளர்க்கும் விளையாட்டு
உறங்கிட வைக்கும் தாலாட்டு!
படிப்பை உயர்த்தும் கதைப்பாட்டு
பண்ணைக் கொடுக்கும் செவிகேட்டு.

அன்பே மனதில் அரசாளும்
அறிவே நினைவில் தினம்வாழும்
இன்பம் நிறைந்தே கனியாகும்
இனிக்கும் வாழ்வின் துணையாகும்!

# தாய்மொழி தமிழ்

வாய்மொழி ஆங்கிலம் ஆனாலும்
தாய்மொழி தமிழை மறவாதே!


தமிழைப் படிப்பது தன்மானம்
தெரியாது என்பது அவமானம்
அமுதை வெறுப்பது அறிவீனம்
அங்கே வருவது பலவீனம்!

முன்னைய மொழிகளில் மூத்தமொழி
முன்னோர் தம்மைக் காத்தமொழி
மின்னிய அறிஞர்கள் படித்தமொழி
முதலில் இலக்கியம் பார்த்தமொழி!

விழியில் தூசி விழுந்தவுடன்
விரைந்தே காக்கும் இமைகளைப்போல்
மொழியில் மாசும் கலக்காமல்
வளர்த்தே வாழ்வது நம்கடனே!

# அன்பாய் இருப்போம்

அன்பாய் பிறரிடம் பழகு
ஆசை அதிகப் தவறு
இன்பம் தருவது சேவை
ஈவது என்றும் தேவை
உடலைக் காப்பது கடமை
ஊரைப் பகைப்பது மடமை
என்றும் நட்பை விரும்பு
ஏளனம் செய்வது குறும்பு
ஐயம் தீர்த்தால் அறிவே
ஒற்றுமை வாழ்வில் உயர்வே
ஓதியே ஒழுகல் திறமே
ஔடகம் என்பது அறிவே!



# நிமிர்ந்து நிற்போம்

நிற்கும் போதும் நடக்கும் போதும்
நிமிர்ந்து நிற்க வேண்டும்!
கற்கும் போதும் நினைக்கும் போதும்
கனிந்து கற்க வேண்டும் !

சொல்லும் போதும் கேட்கும் போதும்
சொல்லில் பணிவு வேண்டும் !
சொல்லும் போதும் சேரும் போதும்
செயலில் துணிவு வேண்டும் !

உண்ணும் போதும் உறங்கும் போதும்
ஒழுக்கம் காக்க வேண்டும் !
எண்ணும் போதும் எழுதும் போதும்
இனிமை சேர்க்க வேண்டும் !

நல்ல பிள்ளை என்ற புகழ்
நமக்கு என்றும் வேண்டும் !
எல்லாம் வல்ல இறைவன் துணை
என்றும் நமக்கு வேண்டும் !

# உடல் பயிற்சி

உடற்பயிற்சி செய்வதால்
உடலில் உறுதி வந்திடும்
உளமும் உறுதி ஆவதால்
ஓங்கி திறமை வளர்ந்திடும் !

நோயில்லாமல் நாமெல்லாம்
நூறு வயது வாழலாம்
ஆய கலைகள் அனைத்தையும்
அறிந்து இன்பம் அடையலாம் !

ஊசியில்லா மருந்து தான்
உண்மை இன்ப விருந்துதான்
ஓசை இன்றி உதவிடும்
உடற் பயிற்சி நண்பன் தான் !

உலகம் முழுதும் செய்கிறார்
உடலில் அழகைப் பெறுகிறார்
திலகம் போல வாழவே
தினமும் பயிற்சி செய்குவோம் !

# ஓட்டப் பாட்டு

பாடிப்பாடி பயிற்சி செய்தால்
பாட்டுக் காரர் ஆகலாம் !
ஓடிஓடி முயற்சி செய்தால்
ஓட்டக் காரர் ஆகலாம் ?

புத்தகத்தைப் படித்து வந்தால்
புத்தி சாலி ஆகலாம் !
சுத்தமாக வாழ்ந்து வந்தால்
துன்பம் இன்றி வாழலாம் !

பெற்றவர்கள் பேச்சைக் கேட்டால்
பெரிய மனிதர் ஆகலாம் !
கற்றவர்கள் போற்று வார்கள்
கேட்டுக் கேட்டு மகிழலாம் !

# கூடி ஆடுவோம்

கூட்டமாக ஒன்றுசேர்ந்து
கூடி ஆடுவோம் - அழகுத்
தோட்டத்திலே பூக்கள் என்று
சேர்ந்து ஆடுவோம் !

ஒற்றுமையே வலிமை என்று
உரக்கப் பாடுவோம் - பெரும்
வெற்றி என்று வேற்றுமையை
விரட்டிப் போடுவோம் !

போட்டியுள்ள ஆட்டத்திலே
பொறுமை காட்டுவோம் - வெறும்
போட்டித நம் பொறுமையை
பொசுக்கி ஓட்டுவோம் !

வெற்றிக்காக விதிகளையே
மீறவேமாட்டோம் - இதை
முற்றும் நாங்கள் புரிந்துகொண்டோம்
மாறவே மாட்டோம் !

# செல்வம் என்பது உடல்நலமே

செல்வம் என்பது பணமல்ல
செல்வம் என்பது உடல்நலமே !
செல்வத்தை சேர்க்க முயன்றிடுவோம்
செழிப்பாய்தினந்தினம் வாழ்ந்திடுவோம்

உடலை மறந்தால் நோய்கள் வரும்
உயிரை வாங்கும் வலிகள் தரும் !
உடலைக் காப்பவர் அறிஞர்களே
உடலைக் கெடுப்பவர் மடையர்களே!

தூய்மை என்பது உடலழகு
வாய்மை என்பது மன அழகு
நேர்மை என்பது செயல் அழகு
நியாயம் என்பது அறிவழகு !

உடலை தூய்மையில் வைத்திடுவோம
உண்மை உழைப்பை வளர்த திடுவோம்
திடமாய் உடலைக் காத்திடுவோம
தெம்பாய் இன்பம் படைத்திடுவோம்

# சாலைப் பாட்டு

சாலையிலே போகும் போது
ஜாக்கிரதை வேண்டும் !
சோலையல்ல சுற்றிப்பார்க்க
சுறுசுறுப்பு வேண்டும்!

பாதையிலே பள்ளம்மேடு
பார்த்துப் போகவேண்டும் !
காதைநன்கு பயன்படுத்தி
கவனம் என்றும் வேண்டும் !

முன்னும்பின்னும் பார்க்கவேண்டும்
முரட்டுத்தனம் வேண்டாம் !
கண்ணைத்திறந்து செல்லவேண்டும்
கற்பனையும் வேண்டாம் !

வாகனங்கள் வேகமாக
வந்துவந்து போகும் !
காகப்போல பார்த்துக்கொண்டே
கடந்துபோக வேண்டும் !

# நடை பாதையில் நடப்போம்

நடு ரோட்டில் நடந்து சென்றால
நமக்குத் தானே துன்பம்
நடை பாதையில் நடந்து சென்றால்
நமக்கு வரும் இன்பம் !

பாதை யிலே இடது புறம்
பார்த்துப் போக வேண்டும் !
பாது காப்பு நமக்கு உண்டு
பத்திரமும் உண்டு !

சாலையிலே கடந்து போக
சாமர்த்தியம் வேண்டும் !
பாலம் தன்னை பயன்படுத்தி
பார்த்து நடக்க வேண்டும் !

ரோட்டினிலே அவசரமாய்
குறுக்குப் பயணம் வேண்டாம் !
மாட்டிக் கொண்டால் துன்பமுண்டு
மறந்து போக வேண்டாம் !

# சூரியன்

காலையில் சூரியன் கண்விழிப்பான்
கடமைகள் செய்திட முன்நடப்பான்
வேலையை மனிதர்கள் செய்திடவே
விரும்பியே தினந்தினம் துணையிருப்பான்!

சேவல் கூவியே சிறகடிக்கும்
சேர்ந்தே குயிலும் குரல்கொடுக்கும்
ஆவலில் மலர்கள் இதழ்விரிக்கும்
அழகாய் சிரித்தே தேன் இறைக்கும் !

வெளிச்சம் உலகில் பரவிவரும்
வேலைகள் வீட்டில் தொடங்கிவிடும்
பளிச்சென பகலும் வந்துவிடும்
பற்பல நன்மைகள் தந்துவிடும் !

சூரியன் உதிப்பது அதிகாலை
சூட்டை கொடுப்பது பகல்வேளை
சுகத்தைக் கொடுக்கும் மாலையிலே
சென்றே மகிழ்வோம் சோலையிலே !

# காற்று

கண்ணுக்குத் தெரியா காற்றே நீ
கற்பனைப் பேச்சுக்கு ஊற்றே நீ !

வாழ்கிற உயிருக்கு மூச்சாவாய்
வாயில் புகுந்தே பேச்சாவாய்
சூழ்கிற உலகில் மறைந்திருப்பாய்
தெய்வம் போலவே நிறைந்திருப்பாய் !

கொடியின் அசைவால் உனை அறிவோம்
கும்பலில் இருந்தால் உனைமறவோம்
பிடியில் அடங்காப் பூங்காற்றே
பேசாமல் உழைப்பது உன் கூற்றே !

சோலையில் தென்றல் பெயராவாய்
சீறியே வந்தால் புயலாவாய்
வேலையில் நீயும் எசமானே
வணங்கியே நானும் மகிழ்வேனே !

# தண்ணீர்

நீரே நீரே தண்ணீரே
நெருப்பில் காய்ந்தால் வெந்நீரே!

கலந்தால் பாலில் பாலாவாய்
கனிந்தால் பழத்தில் சாறுவாய்!
மலரில் புகுந்தே தேனாவாய்!
வாழ்வில் என்றும் துணையாவாய் !

சிப்பியில் விழுந்தால் முத்தாவாய்
சேற்றில் பயிரில் சத்தாவாய்
அப்புறம் மேகம் போலாவாய்
ஆடி அலைந்தே மழையாவாய்!

நீரால் தாகம் போக்கிடுவோம்
நிதமும் சாதம் ஆக்கிடுவோம்!
யாரால் வந்தது தண்ணீரே?
இறைவன் சிந்திய பன்னீரே!

# மண்ணின் கதை

**பாப்பா :** நிலமே உந்தன் கதைகேட்க
நெஞ்சம் விரும்புது சொல்லாயோ!

**நிலம் :** முதலில் இருந்தேன் மலையாக
மடுவில் விழுந்தேன் கல்லாக!
சிதறிப் போனேன் மணலாக
சேர்ந்தேன் பிறகு நிலமாக!

ஆறுகள் ஓடத் தரையானேன்
அலைகளை அடக்கக் கரையானேன்!
மாறியே பள்ளம் மேடானேன்
மனிதர்கள் வசிக்கும் வீடானேன்!

தங்கம் தந்தேன் நகைபோட
தானியம் கொடுத்தேன் பசியோட!
எங்கும் பூக்கள் அசைந்தாட
என்னையே கொடுத்தேன் இசைவாக!

உலகில் உள்ள பொருளெல்லாம்
உங்களுக் காக நான்கொடுத்தேன்!
பலரும் சேர்ந்தே பகுத்துண்டு
பண்பாய் வாழ்வீர் பல்லாண்டு!

# மரத்தின் கதை

பூமியில் ஒருவிதை விழுந்தது
பொறுத்தே பலநாள் கிடந்தது!
மாமழை அதன்மேல் பொழிந்தது
மறுநாள் முளையும் எழுந்தது!

சூரியன் வெப்பம் தந்தது
சுற்றியே காற்றும் வந்தது!
வீரியத் தால்செடி உயர்ந்தது
விரைவில் மரமாய் வளர்ந்தது!

கிளையும் நிழல்தர வந்தது!
இளர்ந்தே பூக்களும் மிகுந்தது
குலையாய் காய்களும் காய்த்திட
குலுங்கின கனிகள் அசைந்திட!

வந்தே பறவைகள் கத்தின
வாயால் பழங்களைக் கொத்தின!
சிந்தை மகிழ்ந்தே கூவின
சேர்ந்தே கிளைகளில் தாவின!

மனிதரும் வந்தே அமர்ந்தனர்
வாழ்த்தியே நிழலில் உறங்கினர்!
இனிதாய் மரம்போல் பயன்தர
இனிமேல் நாமும் இருப்போமே!

# என் பெயர் ரோஜா

என்னை ரோஜா என்பார்கள்
இதழை விரும்பித் தின்பார்கள்!

குங்குமம் போலவே சிவந்திருப்பேன் !
கூடவே சந்தனம் கலந்திருப்பேன்!
அம்புலி போலவே சிரித்திருப்பேன்
அழகாய் சிரித்தே தேன்கொடுப்பேன்!

மடியில் குழந்தை சிரிப்பதுபோல்
மக்களைச் சிரித்தே மயக்கிடுவேன்!
முடியில் அமர்ந்தே சிவந்திடுவேன்!
மின்னும் அழகில் கலந்திருப்பேன்!

என்னைக் கண்டே வண்டுகளும்
இசையைக்கூடவே கொண்டுவரும்!
பொன்போல் என்னைப் போற்றிடுவார்
புகழாய் தலையில் ஏற்றிடுவார்!

# பச்சைக்கிளியே வாவா

கிளியே வாவா வணக்கம்
கேட்பேன் தருவாய் விளக்கம் !

கொத்திக் கனியைத் தின்றதால்
கூரிய மூக்கும் வளைந்ததோ ?
நித்தம் நிறையநீ தின்றதால்
வளைந்தஉன் மூக்கும் சிவந்ததோ !

பச்சை நிறத்தில் உன்மேனி
பச்சை இலைகள் தந்தனவோ ?
கொச்சை யானப் பேச்செல்லாம்
குழந்தைகள் கற்றுத் தந்தனரோ ?

தலையை சாய்த்தே பார்க்கின்றாய்
தத்தித் தத்தி நடக்கின்றாய் !
கிளையை விட்டே தாவுகின்றாய் ?
கேட்டேன் ஏனோ பறக்கின்றாய் ?

# ஆட்டுக்குட்டி

மேமே ஆட்டுக்குட்டி
வீட்டில் வளரும் செல்லக்குட்டி !

கழுத்து மணியை ஆட்டுகிறாய்
காதைத் தொங்க விடுகிறாய் !
அழுத்த மாக நடக்கின்றாய்
யாரை எதிர் பார்க்கிறாய் ?

இரண்டு காலில் நிற்கிறாய்
எட்டித் தழையைப் பறிக்கிறாய் !
புரண்டு புரண்டு படுக்கிறாய்
பொறுத்து மெல்லக் கத்துகிறாய் !

மானைப் போல துள்ளுகிறாய் !
மயங்கி மூச்சை இழுக்கிறாய் !
யானை போலே தின்கிறாய் !
ஏனோ இப்படி இளைக்கிறாய்?

# எங்கள் வீட்டு நாய் குட்டி

அங்கும் இங்கும் ஓடி
ஆட்டம் போடும் சுட்டி !
எங்கள் வீட்டு நாய்க்கு
இட்ட பெயர் குட்டி !

வாலை ஆட்டி வந்து
வாயில் வாங்கும் ரொட்டி !
காலைத் தூக்கி நின்று
கவ்வி ஓடும் எட்டி !

காலின் அருகில் குந்தி
காவல் காக்கும் குட்டி !
ஆளைக் கண்டு விட்டால்
அதட்டு வதில் கெட்டி !

# சுறுசுறுப்பான எறும்பு

சுறுசுறுப்பான எறும்பே-ஒரு
சோம்பல் இல்லாத எறும்பே !
குறுகுறு வெனநீ நடந்தே-நீ
கூடியே வாழ்வது ஒழுங்கே !

அரிசியைக் கண்டால் ஓட்டம்-தினம்
அங்கே உந்தன் கூட்டம் !
வரிசையில் சென்றே காட்டும்-உங்கள்
வழியே அழகினைக் கூட்டும் !

இனிப்பைத் தின்றிட நுழைவாய்-நீ
எப்படித் தான்வழி அறிவாய் ?
தனித்தே சென்றுநீ அறிவாய்-நீ
சுற்றும் சூழ்ந்தே மகிழ்வாய் !

கடித்தால் யானையும் கதறும்-நீ
கல்வில் ஊர்ந்தால் கரையும்
இடமாய் இருக்கும் எறும்பே-நாம்
திடமாய் வாழ்ந்திட இயம்பே !

# சேவலைப் பார்

சேவலைப் போல நிமிர்ந்துநட
செல்லும் வழியைப் பார்த்துநட !

குயிலைப் போலே கூவிடுவாய்
குருவியைப் போலே தாவிடுவாய் !
மயிலைப் போலே ஆடிடுவாய் !
மானைப் போலே ஓடிடுவாய் !

ஒன்றாய் வாழ்வது ஒற்றுமையாம்
ஒற்றுமை அன்பின் முற்றுகையாம் !
நன்றாய் வாழ்வது அறிவுடைமை
நலமாய் இருப்பது நம்கடமை !

பணிவாய் இருந்தால் சுகம்கிடைக்கும் !
படித்தே வாழ்ந்தால் புகழ்கிடைக்கும் !
துணையாய் வாழ்ந்தால் துயர்நீங்கும் !
தோழமை கொண்டால் செயல்ஓங்கும் !

# எங்கள் லட்சியம்

இன்று சின்னக் குழந்தைகள்
எங்கள் அழகைப் பாருங்கள்!
நன்கு வளர்ந்து வருகிறோம்
நாளை பெரிய மனிதர்கள் !

நிலத்தைப் போல வளமையாய்
நிதமும் உடலை வளர்த்துவோம் !
நீரைப் போல் எளிமையாய்
நிதமும் பிறர்க்கு உதவுவோம் !

நெருப்பைப் போல வலிமையாய்
நேர்த்தியாக உதவுவோம் !
சிறப்புமிக்கக் காற்று போல்
தினமும் உழைத்து மகிழுவோம் !

உழைப்பை என்றும் போற்றுவோம் !
உண்மை தீபம் ஏற்றுவோம் !
மழையைப் போல வாழவே
மனதில் கொண்டு வளர்கிறோம் !

# மேன்மையாக வாழுவோம்

நல்ல நல்ல பாடலை
நாமும் கூடிப் பாடுவோம்
நல்ல நல்ல அறிவினை
நாமும் கற்று ஆடுவோம் !

நல்ல நல்ல பழக்கத்தை
நாளும் கேட்டுப் பழகுவோம் !
மெல்ல மெல்ல பழகியே
மேன்மையாக வாழுவோம் ;

பெரியவர்க்கு வணங்குவோம் !
சிறியவர்க்கு உதவுவோம் :!
வறியவர்க்கு வழங்குவோம் !
பிறர்க்கும் வாழ்ந்து காட்டுவோம் . !

பாயும் கடல அலையைப்போல்
பாடி உழைத்து வாழுவோம் !
நோயில்லாமல் வாழுவோம் !
நூறு வயது வாழுவோம் .

# திருநாள்

ஊரில் வந்தது ஒருநாள்
ஊரார் விரும்பிய திருநாள் !
தேரில் தெய்வம்வரும் நாள்
தேடியே இன்பம் தரும்நாள் !

தெருவில் எங்கும் ஊர்வலம்
தெரிந்தவர் முகத்தில் குதூகலம் !
தரையில் போட்டனர் கோலம்
தடபுடல் போட்டது மேளம் !

புதிதாய் உடைகளும் அணிந்தார்
புன்னகைப் பேச்சிலே கலந்தார் !
விதவிதமாகவே நடந்தார் !
வேடிக்கை கண்டே மகிழ்ந்தார் !

அப்பா அம்மா வந்தனர்
அன்பாய் வாங்கித்தந்தனர் !
சிப்பாய் போல்நான் நடந்தேனே !
சிரித்தே துள்ளி மகிழ்ந்தேனே !

# இப்படி வாழ்வோம்

ஆற்றைப் போல கரைகளுக் குள்ளே
அடங்கி நடப்பதுஒழுங்கு!
ஊற்றைப் போல தண்ணீர் தந்து
உதவி செய்வது பண்பு!

காலையில் சூரியன் உதிப்பது போல
காரியம் செய்வது கடமை!
சோலையில் பூக்கள் சிரிப்பது போல
சுகமாய் வாழ்வது திறமை!

காகத்தைப் போல கூடியே வாழ்ந்து
கலந்தே உண்பது அன்பு!
மேகத்தைப் போல மழையைப் பொழிந்து
வாழ்வில் உதவுதல் தியாகம்!

ஒருவருக் கொருவர் உதவியே வாழ்வோம்
இதுவே நமது இலட்சியம்!
ஒருமுறை செய்தே பார்த்தால் புரியும்
உள்ளத்தில் குதிக்கும் ஆனந்தம்!

# வழிகாட்டி

கோழிபோல காலையிலே விழிக்கனும் - சிட்டுக்
குருவிபோல சுறுசுறுப்பாய் இருக்கனும்

அன்னம்போல அழகுநடை நடக்கனும் - அதில்
ஆந்தைபோல நல்ல நோக்கம் இருக்கனும்
வண்ணக்கிளிபோலமொழி பேசனும் - அதில்
மைனாவைப் போல் இனிமை இருக்கனும்.

மாடப்புறா போலகூடி வாழனும் - தினம்
மாங்குயிலைப் போலபாடி வாழனும்
காக்கைபோல ஒற்றுமையாய் இருக்கனும் - மனம்
கருடன்போல காரியத்தை முடிக்கனும்,

யானைபோல ஞாபகமாய் வாழ்னும் - கூடி
எறும்புபோல வரிசையாக நடக்கனும்.
மானைப்போல வேகமாக ஓடனும் - பசு
மாட்டைப்போல மக்களுக்கு உதவனும்.

# தமிழைப் படிப்போம்

அஆ இஈ உஊஎ
ஏஐ ஒஓ ஔஎன்றே
மொழிக்கு முதலில் வரும்எழுத்து
முதலே தமிழுக்கு உயிர்எழுத்து

க்ஞ் ச்ங் ட்ண்த்
ந்ப் ம்ய் ர்ல்வ்
ழ்ள் ற்ன் எனும்எழுத்து
வழிவழி வருகின்ற மெய்யெழுத்து

உயிரில் இரண்டு வகையுண்டு.
பெயரே குறில்நெடில் எனஉண்டு
அஇஉ எஒ குறிலாகும்
அடுத்தவை ஏழும் நெடிலாகும்.

மெய்யில் மூன்று பிரிவுண்டு.
செய்திடும் பிரிவில் சிறப்புண்டு.
ஐயம் இன்றி அறிந்திடுவோம்.
அதனைதன் சுவையை உணர்ந்திடுவோம்.

கசடதபற இவை வல்லினமாம்.
ஙஞணநமன இவை மெல்லினமாம்.
யரலவழள இவை இடையினமாம்.
இனியநம் தமிழுக்குப் படையினமாம்.

உயிரும் மெய்யும் சேர்ந்துவிட்டால்
உயிர்மெய் எழுத்தாய் மாறிவரும்
உயிர்மெய் எழுத்தே உடல்உயிர்போல்
ஒன்றாய் வாழும் தமிழ்உயரும்.

உயிரெழுத் தென்பது பனிரெண்டு
மெய்யெழுத் தென்பது பதினெட்டு
உயிர்மெய் இருநூற்றிப் பதினாறு
உண்டொரு 'ஆய்தம்' நீசேரு.

சுட்டிக் காட்டும் அஇஉ
சுட்டெழுத் தாகும் சுகம்ஊட்டும்
கேள்வியைக் கேட்கும் எஏயா
ஆஓ என்பது வினாஎழுத்தே.

# கவிதைப் பயிற்சி – 1

கடலில் கிடைக்கும் உப்பு!
கணக்கில் வருவது..................
திடலில் குதிக்கும் பந்து!
தெருவில் குறுக்கே..................

மழையில் வருவது வெள்ளம்!
மலையின் அடியில்..................
பழத்தில் இருப்பது சாறு!
பசித்தால் வேண்டும்..................

ஆடுகள் மேய்ப்பவன் இடையன்
அறிவு கெட்டவன்..................
பாடுகள் படுபவன் ஏழை
பயந்தே வாழ்பவன்..................

வயலை உழுவது ஏராகும்!
விழாவில் வருவது..................
பயிரை வளர்ப்பது நீராகும்!
பானத்தில் சிறந்தது..................

நீங்களே யோசித்து கோடிட்ட இடங்களை நிரப்புங்கள். தெரியாவிட்டால், கீழே கொடுத்திருக்கும் பொருத்தமான சொற்களைத் தேர்ந்தெடுத்துப் போடுங்கள்.

[மோராகும், கோழை, சோறு, சந்து, தப்பு, பள்ளம், மடையன், தேராகும்]

# கவிதைப் பயிற்சி - 2

குடும்பத்தில் உள்ளது பாசம்!
கொடுக்கல் வாங்கல்....................
படிப்பில் கிடைப்பது புத்தி!
பழத்தை அறுப்பது....................

அன்பைக் காட்டிடும் சிரிப்பு!
அனலைக் கூட்டிடும்....................
சண்டையில் வேண்டும் துணிவு!
சமரசம் என்றால்....................

நிழலில் கிடைப்பது சுகம்!
நீரில் தெரிவது....................
குழந்தையின் பேச்சில் இன்பம்
கூடியே பிரிந்தால்....................

பாலில் கிடைப்பது வெண்ணெய்-கடலைப்
பருப்பில் கிடைப்பது....................
சேலாய் துள்ளிடும் கண்கள் - வண்ணச்
சேலைகள் கட்டுவோர்....................

[கத்தி, பணிவு, பெண்கள், இன்பம், மோசம், முகம், எண்ணெய், நெருப்பு]

# கவிதைப் பயிற்சி - 3

சோலைக்கு மறுபெயர் பொழில் - அதைச்
சுற்றியே திகழும்........................
சாலையின் இருபுறம் மரங்கள் - அவற்றின்
தழைகள் வயலுக்கு........................

ஆற்றிலே ஓடிடும் தண்ணீர் - நாம்
அழுதால் கசிந்திடும்........................
காற்றிலே மிதப்பது கீதம் - கை
கால்களை முடக்கிடும்........................

உயரே பறந்திடும் பட்டம் - ஊர்
ஒழுங்கைக் காத்திடும்........................
அயர்ந்தால் வருமே நோய்கள் - தாவி
ஆள்மேல் பாயுமே........................

வீட்டுக்குக் காவல் கதவு - துன்ப
வேளையில் பிறருக்கு........................
பாட்டுக்குத் தேவை ராகம் - கேட்டுப்
புற்றினில் சீறிடும்........................

(வாதம், உரங்கள், உதவு, நாகம், எழில், சட்டம், நாய்கள், கண்ணீர்)

## கவிதைப் பயிற்சி - 4

பேச்சினில் வேண்டும் அழகு - நீ
பிறருடன் அன்பாய்................
மூச்சுக்கு வேண்டும் காற்று - செய்ய
முடியா விட்டால்................

இருப்பவர் வாழ்வது உலகம் - அழகாய்
இடுவது நெற்றியில்..................
உறுப்பினர் சேர்ந்தால் கூட்டம் - சென்னையி
உண்டே வள்ளுவர்.................

வானத்தில் அலைவது மேகம் - காலை
வந்ததும் கரைவது.................
தானாய் வளர்ந்திடும் தேகம் - நீர்
தந்தால் தணிந்திடும்........... .....

ஆற்றைக் கடப்பது பாலம் - வாசல்
அழகுக்குப் போடுவார்... ............
பூட்டுக்குத் தேவை சாவி - துறவி
போட்டுக் கொள்வது... ... ..........

(பொருத்தமான சொற்களைத் தேர்ந்தெடுத்துப் போடவும்)

(காவி, தாகம், கோட்டம், மாற்று, கோலம், காலை திலகம், பழகு)